## கட்டுநாயக்க சீதுவ நகர சபை
## கம்பஹா மாவட்டம்

-------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 மறுப்பு அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கட்டுநாயக்க சீதுவ நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

**1.3 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டின் இறுதியில் நிகழத்தக்க பொறுப்பாக காண்பிக்கப்பட்ட ரூபா 12,363,015 தொகையான நிலுவை ஊழியர் சேமலாப பங்களிப்பு நிதி மீளாய்வாண்டில் தீர்க்கப்பட்டிருந்த போதிலும், அது கணக்குகளில் சீராக்கப்படாதிருந்ததுடன், மேலும் 26 ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட நிலுவை ஊழியர் சேமலாப பங்களிப்பு பணம் தொடர்பாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களில் சரியாக சீராக்கம் செய்யப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் சரியாக சீராக்கம் செய்யப்பட வேண்டும். | மேலும், ஊழியர்களில் சிலருக்கு ஊழியர் சேமலாப பங்களிப்பு பணம் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் அந்த பெறுமதியை சரியாக இனங்காண்பதற்கு முடியாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட சேமலாப பங்களிப்பு பணம் நிகழத்தக்க கணக்கில் சீராக்கம் செய்யப்படாமல் நிகழத்தக்க பொறுப்பாக நிகழத்தக்க பொறுப்புக் கணக்கில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட பௌதீக இருப்பு பெறுமதி கணக்கீடு | பௌதீக இருப்பு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட | ஒவ்வொரு வருடத்தின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பௌதீக இருப்பு கணிப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படாமல் ரூபா 10,018,436 தொகையான புத்தகப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். | செய்தல் கஸ்டமாக இருந்தமையால் பேரேட்டு மீதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டு இருந்தது. |
| (iii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு புத்தகத்தின் பாஸ் புத்தகத்தின் பிரகாரம் ஊழியர் பிணை முதலீடு ரூபா 124,281 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூா 43,587 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 80,694 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மொத்த பிணை முதலீடு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட்டி பதிவுகள் வைக்கப்பட்டதன் பின்னர் வங்கியிலிருந்து கிடைக்கப்பெற்ற வட்டியின் அளவு ஊழியர் பிணை வைப்புக் கணக்கில் சீராக்குவதற்கு 2019 இன் இறுதிக் கணக்குகளின் போது நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கின்றோம். |
| (iv) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 652,174 தொகையான மின்பிறப்பாக்கி இயந்திரம் மூலதனமாக்கும் போது ரூபா 97,826 உடன் ரூபா 750,000 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது. | பெறுமதிசேர் வரி மூலதனமாக்க முடியாது. | மூலதனமாக்கப்பட்டுள்ள மேலதிக பெறுமதியான ரூபா 97,826 தொகை 2019 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும். |
| (v) | ரூபா 507,387 பெறுமதியான நூலக புத்தக பெறுமதி இருப்பு அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மேலதிமாக நூலக புத்தகங்களின் இருப்பு 2019 இன் இறுதிக் கணக்குகளின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 07 கணக்கு விடயங்களின் மீதிக்கும் பயன்பாட்டு பட்டோலைகளின் மீதிக்கும் இடையே ரூபா 16,044,075 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாட்டினை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற 12,051,288 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மீதி வேறுபாடுகளை இனங்கண்டு சரியாக சீராக்கம் செய்யப்பட வேண்டும். | இந்த மீதி வேறுபாடுகள் எதிர்காலத்தில் கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (i) பெறவேண்டிய கணக்குகள் | | |
| 2008 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 61,870 தொகையான மதிப்பிழந்த காசோலை கணக்கின் வரவு மீதி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்கண்டு தீர்த்து வைக்கப்படவில்லை. | விரைவாக பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அது தொடர்பாக மேலும் கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| * ஊழியர் பிணை வைப்பு மீதியில் தற்போது சபையில் இருக்காத 6 ஊழியர்களுக்குரிய பிணைப் பணம் ரூபா 28,165 தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஊழியர்கள் விலகிச் செல்லும் போது ஊழியர் பிணை வைப்பை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கோரிக்கை கடிதத்தை பெற்றுக் கொள்ளல் மற்றும் உரிய கோவைகளை ஆராய்ந்து விபரங்களை பெற்று எதிர்காலத்தில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| * பல வருட காலமாக தொடர்ச்சியாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,534,700 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட தவணை மூலதன | செலுத்த வேண்டிய மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது இந்த மீதி நீர் வைப்பு மற்றும் புதிய மதிப்பீட்டு தவணை கணக்கில் செலவு |

| | | |
|---|---|---|
| செலவினம் மீள்வாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(உ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 15,957,253 தொகையான பெறுமதியான 02 கணக்கு விடயங்களுக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் அவற்றை திருப்திகரமாக சான்றுதிப்படுத்தவோ / உறுதிப்படுத்தவோ முடியாதிருந்தது. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஆதன வரிகளை பதிவழிப்பதில் 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 17,996 தொகை வருமான பரிசோதகரின் பரிந்துரை மற்றும் தலைவரின் அங்கீகாரத்தின் பிரகாரம் பதிவழிக்கபட்டிருந்ததுடன் பெறவேண்டிய செயத்திட்ட உதவி கணக்கின் மீதியான ரூபா 26,331,555 இல் ரூபா 10,439,170 தொகைக்குரிய தகவல்கள் பதிவேட்டில் காணப்படுகின்றமையை தெரிவிக்கின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 396 | 596,096 | மக்கள் வங்கி நடைமுறை கணக்கிற்குரிய 2019 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு விநியோகிக்கப்பட்டிருந்த போதும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத 06 | நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடிதம் மூலம் அறிவித்ததன் பின்னர் பதில் அளிக்காதுவிடின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மாதங்களை மிஞ்சிய ரூபா 596,096 பெறுமதியான 22 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 555,558 தொகையான 14 காசோலைகள் 01 வருடத்தை விஞ்சியிருந்தது. | | |
| (ii) | நிதிப் பிரமாணம் 762 | 1,383,815 | இரும்புப் பொருட்கள் மற்றும் கட்டிட பொருட்கள் இருப்பு மட்டத்தை பேணிச் செல்லும் போது மிகவும் பொருத்தமான இருப்பினை வைத்துக் கொள்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தேவையான இருப்பு மட்டத்தை பேணிசெல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பழுதுபார்க்க வேண்டிய மட்டத்தில் 08 டிறயிலர்கள் காணப்பட்டமையால் அதில் டிறயிலர்கள் பழுதுபார்ப்பதற்காக புதிய இருப்பு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதை அறியத் தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 64,410,937 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 79,379,143 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மக்கள் வங்கி நடைமுறை கணக்கில் வங்கி இனக்கக் கூற்றின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக்கு கிடைத்த ரூபா 6,194,445 தொகையான அனுப்புதல்களின் பெறுமதி இனங்காணப்படவில்லை. | நேர் அனுப்புதல்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சகல நேர் பெறுவனவுகளுக்காகவும் உரிய நிறுவனத்தினால் பெறுவனவு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் பற்றுச்சீட்டின் மூலம் வருமானத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் இலங்கை வங்கி நடைமுறை கணக்கில் ரூபா 21,838 பெறுமதியும் மற்றும் மக்கள் வங்கி கணக்கில் ரூபா 110,073 பெறுமதியும் இனங்கண்டு சீராக்கம் செய்யப்படவில்லை. | வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கும் போது வங்கி கணக்குகளில் காணப்படுகின்ற சகல கொடுக்கல் வாங்கல்களும் இனங்கண்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் சில வாரங்களில் சரி செய்து வங்கி இணக்கக் கூற்று சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 |
| (i) | வீதவரியும் வரியும் | 106,309 | 110,112 | 98,850 | 11,261 | 105,350 | 106,661 | 105,151 | 57,462 |
| (ii) | வுாடகை | 11,325 | 12,734 | 12,396 | 338 | 9,575 | 12,706 | 10,134 | 3,571 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,151 | 2,703 | 2,703 | - | 2,631 | 2,842 | 2,842 | 66 |
| (iv) | ஏனைய வருமானம் | 59,359 | 44,986 | 44,788 | 198 | 50,372 | 79,688 | 68,707 | 3,020 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை ஆதன வரி வருமானம் ரூபா 57,462,219 தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 14,064,337 தொகை அறவிடப்பட்டமையால் நிலுவை ஆதனவரி அறவிடும் சதவீதம் 24 குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | தொடர்ந்தும் காணப்படுகின்ற நிலுவை பணத்தை அறவிடும் நிகழ்ச்சிதிட்டம் 2019 பெப்ரவரி மாதத்திலிருந்து அமுல்படுத்தப்படுவதுடன் இந்தப் பணத்தை |

| | | |
|---|---|---|
| | | அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை அறியதருகின்றோம். |
| (ஆ) நகரசபை அதிகாரப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள 11 தொலைத்தொடர்பு கோபுரங்களிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிட வேண்டிய ரூபா 314,171 தொகையான ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அந்தந்த ஆண்டில் ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 11 தொலைத் தொடர்பு கோபுரங்களில் இருந்து 2019 ஆம் ஆண்டில் முதலாம் காலாண்டில் இருந்து ரூபா 175,884 தொகை அறவிடுவதற்கு இருந்ததுடன் சிவப்பு அறிவித்தல் அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டில் இனங்காணப்பட்ட சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள 03 பிரதான ஹோட்டல்களில் வருமானத்தின் அடிப்படையில் 1 சதவீதத்தை விஞ்சாத அனுமதிப்பத்திர கட்டணமான ரூபா 18,083,263 தொகை அறவிடப்படவில்லை. | நகரசபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டுள்ள சுற்றுலா ஹொட்டல்களின் வருமானத்தின் அடிப்படையில் 01 சதவீதத்தை விஞ்சாத அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2019 பெப்ரவரி 13 ஆந் திகதி கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டிருந்ததுடன் அதன் போது அவ்களினால் 1 சதவீத அனுமதிப்பத்திரக் கட்டணம் தொடர்பாக சுற்றுலா சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல் உரிமையாளர்கள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுத்திருந்தமையினால் வழக்கின் முடிவு கிடைக்கும் வரை இந்த அனுமதிப் பத்திரக்கட்டணத்தை செலுத்த முடியாது என்று கூறியிருந்தனர். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) எதிர்பார்த்த நலன்கள் (Out come) பெறப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது லியனகேமுல்ல பன்சல வீதி ரூபா 98,000 மதிப்பீட்டு பெறுமதியில் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 05 மாதங்களான குறுகிய காலத்தில் வீதியில் காணப்பட்ட ABC கல்லுடன் தாரின் ஒரு பகுதியும் கழன்று வீதி பயன்படுத்த முடியாத கஸ்டமான பிரகாரம் குழிகள் ஏற்பட்டு இருந்தது. | குறித்த நியமங்களின் பிரகாரம் வீதியை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதிக நிறையுள்ள வாகனங்கள் பயணம் செய்வதன் மூலம் விமான நிலையம் மாற்று வழியொன்றாக பாவித்தமை மற்றும் மழையினால் 05 மாதங்கள் கால எல்லையில் வீதி உடைந்து குழிகள் ஏற்பட்டிருந்தமையை குறிப்பிடுகின்றோம். |

**(ஆ) கைவிடப்பட்ட பணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மதிப்பீட்டு பெறுமதி ரூபா 346,943 தொகையான வடக்கு லியனகேமுல்ல HPT வத்தையிலிருந்து புகையிரத வீதி வரையுள்ள பகுதிக்கு கொங்கிறீட் இட்டு அபிவிருத்தி செய்யும் வேலை 2017 பெப்ரவரி 29 ஆந் திகதி ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பீடு மற்றும் ஒப்பந்தகாரரின் இட அளவைக்குமிடையே இணங்காமையை காண்பித்து 2018 ஏப்ரல் 23 ஆம் திகதி இந்த வேலை இரத்து செய்யப்பட்டிருந்தது. பெறுகை நடைமுறைகளுக்காக ஏதாவது கிரயம் ஒன்றை செய்திருக்கும் போது மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்டு 1½ வருடங்கள் கடந்திருந்த போதும் இந்த வேலையை இரத்துச்செய்து உரிய நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. | மதிப்பீடு தயாரிக்கும் போது அளவிடைகள் மற்றும் பெறுமதி சரியாக உள்ளடக்கப்பட வேண்டும். | மதிப்பீடு அச்சிடும் போது ஏற்பட்ட வழுக்களினால் அவை ஏற்பட்டதுடன் எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வறுமையை ஒழிக்கும் நோக்காக கொண்டு அம்பலன்முள்ள மலர்ச்சாடி உற்பத்தி செய்கின்ற வறுமையில் உள்ளவர்களை தெரிவு செய்து சீமெந்து உதவியினை வழங்குவதற்காக மும்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது அமுல்படுத்தப்படவில்லை | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | .இதுவரையில் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பரிசோதனையொன்று மேற்கொண்டு அம்பளன்முள்ள கிராம சேவையாளர் பிரிவில் மலர்ச்சாடிகளை உற்பத்தி செய்கின்ற வறுமைக்குட்பட்டவர்களை தெரிவு செய்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி ரூபா 586,174 தொகை செலவில் பழுதுபார்க்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்ட கட்டுநாயக்க பொதுச் சந்தையின் இறைச்சிக்கடை அமைந்துள்ள கட்டடம் 2018 திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திறக்கப்படவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துகனின் வருமானங்களை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபை தீர்மானத்தின் மூலம் கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நகர சபை கட்டிட எல்லையில் தனியார் நிறுவனமொன்றுக்கு களஞ்சியம் அமைப்பதற்காக விளையாட்டு மைதானத்தின் நடுவில் 131.9 மீட்டர் நீளமும் 7.5 மீட்டர் அகலமுமுடைய வீதியொன்று அமைக்கப்பட்டிருந்த போதிலும், இந்த வீதி உரிய நிறுவனத்திற்கு கையளித்தல் தொடர்பான தகவல்கள் உறுதிப்படுத்தப்படாமையினால் சபையின் சொத்துக்கள் வெளி நிறுவனங்களுக்கு பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | சரியான அங்கீகாரமின்றி சபைக்கு சொந்தமான காணி வெளித்தரப்பினரின் பாவனைக்காக வழங்கப்பட முடியாது. | எண்ணெய் மற்றும் உராய்வுகளை உள்ளடக்கிய சபை வலயத்தில் காணப்பட்ட வீதிகளாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் பின்னர் பிறிமா நிறுவனமும் இந்த வீதியை அதே முறையில் பயன்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2004 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான கால எல்லையில் நகர சபையில் சேவையில் இருந்து 105 செயற்திட்ட தொழிலாளர்களுக்காக ஊழியர் சேமபால நிலையத்திற்கு பங்களிப்பு பணம் செலுத்தாமையின் காரணமாக அந்த கால எல்லைக்குரிய நிலுவை சேமலாப நிதியப் பணம் மற்றும் மிகைக் கட்டணமாக ரூபா 12,222,896 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்து. | மிகை கட்டணமாக செலுத்தப்பட்டிருந்த பணத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். | அவசர சேவை செயற்திட்டத்திற்காக ஊழியர்களை சேர்த்து அவர்களுக்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட படியொன்று மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக சேமலாப நிதிய பங்களிப்புப் பணம் செலுத்தப்படவில்லை. 2011 முதல் 2017 வரை அந்த ஊழியர் சேமலாப நிதிய பணத்திற்காக உதவி தொழில் ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் மிகைக் கட்டணமும் செலுத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2013 ஆம் ஆண்டில் இடமமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தரின் ரூபா 24,940 தொகையான இடர் மற்றும் விழா கடன் மீதி என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | .இந்த மீதி தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரிடம் விசாரித்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசம்பர் 31 இல் உள்ளவாறு நீர்க் கட்டண பட்டியல் ரூபா 11,804,184 பெறுமதிக்காக காலப் பகுப்பாய்வினை பெற்றுக்கொள்ளும் இயலுமை (Facility) கணனி தொகுதியின் மூலம் அபிவிருத்தி செய்யப்படவில்லை. | கணனி பெக்கயின் மூலம் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளுவதற்கு இயலுமை காணப்பட வேண்டும். | கணனிமயப்படுத்தப்பட்ட பக்கேஜ் நிர்மாணிக்கப்பட்ட நிப்பா நிறுவனத்திற்கு இதற்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் இதுவரையிலும் தேவையான பிரகாரம் பக்கேஜ் அபிவிருத்தி செய்யப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் நீரைப் பெற்றுக் கொள்வதற்கு 2018 ஆம் ஆண்டின் ரூபா 17,774,368 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், நீரைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் ஆண்டின் போது கிடைத்த வருமானம் கணிப்பீடு செய்யப்படவில்லை. 2018 நவம்பர் 28 ஆந் திகதியில் காணப்பட்ட ரூபா 10 மில்லியனை விஞ்சிய நிலுவைக் கடன்களை அறவிடும் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டது | நீரை பகிர்ந்தளிக்கும் பட்டியல் மாதாந்தம் தயாரிக்கப்பட்டு சேகரிக்கப்பட்ட வருமானத்தை இனங்காணக்கூடிய தாக இருக்க வேண்டும். | இலாபம் பெறும் நோக்கத்தினாலன்றி பிரதேசத்துக்கு மக்களுக்கு குடிநீரை வழங்கும் நோக்கல் நீர்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவராமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கட்டிடங்கள் தொடர்பாக நிலையான சொத்து பதிவேட்டில் பராமரிக்கப்படவில்லை. | நிலையான சொத்து பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். | கட்டிட சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்து பதிவேடொன்று எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையினால் கழிவுப்பொருட்களை தரம்பிரிப்பதற்காக சபைக்குச் சொந்தமான கஸகஹவத்த காணியின் வளநிலையமொன்று நிர்மாணிக்கப்பட்ட அப்பிரதேசத்தின் பின்னர் ஹோட்டல் தொழில்முயற்சியாளர்களின் எதிர்ப்பின் அடிப்படையில் இந்த வள நிலையம் பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாமல் சபையினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வின் மூலம் அதன் செயலாற்றல் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச வாசிகளின் எதிர்ப்பின் அடிப்படையில் அந்நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதாகவும் மீண்டும் சபையிடம் விசாரித்து கழிவுப்பொருட்களை கொண்டு போடும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | றக்டர், டிறயிலர் என்பவற்றை அமைப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,353,815 பெறுமதியான இரும்பு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், டிறக்கடர், டிறயிலர் பழுதுபார்த்தலோ அல்லது டிறக்கடர், டிறயிலர்களை அமைத்தலோ மேற்கொள்ளப்படவில்லை. அதன் பிரகாரம், ரூபா 1,017,000 பெறுமதியான இரும்பு பொருட்கள் மற்றும் ஐந்து வகையான கட்டிட பொருட்களின் இருப்பொன்று 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அசைவுறாத இருப்பாக களஞ்சியத்தில் காணப்பட்டது. அந்த இருப்பு களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கும் போது முறையான திட்டமொன்று பின்பற்றப்படாதிருப்பதுடன் விநியோகிக்கும் கட்டளைகளில் களஞ்சிய பொறுப்பாளர் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது. மேற்பார்வை உத்தியோகத்தரின் அங்கீகாரமின்றி வடிவமைப்பாளரின் கோரிக்கையின் அடிப்படையில் மாத்திரம் இரும்பு பொருட்கள் களஞ்சியத்திலிருந்து. விநியோகிக்கப்பட்டிருந்தது. | தேவையின் பிரகாரம் பொருட்கள் கொள்வனவு செய்ய வேண்டியிருந்ததுடன் தேவையற்ற பொருட்கள் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்த முடியாது. இருப்பு பெறுவனவு மற்றும் விநியோகித்தல் முறையாக இருக்க வேண்டும். | சபையில் உள்ள பழுதுபார்க்கவேண்டிய டிறக்டர், டிறயிலர்களை பழுதுபார்ப்பதற்கும் பிரதேசத்தில் உள்ள பாதுகாப்பற்ற மதகுகளுக்கு தூண்களை அமைப்பதற்காகவும் இரும்பு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், களஞ்சிய முறையான இருப்பின் அடிப்பரிடயில் விநியோகிப்பற்றகாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆலாசனை வழங்கப்படும். |
| (ஆ) | மதிப்பீடு தயாரிக்காமல் மீளாய்வாண்டில் 10 வீதிகளை பராமரிப்பதற்காக CSS01 கொலஸ் லீற்றர் 3450 வேலைப்பிரிவின் பதிவேட்டின் பிரகாரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும், களஞ்சிய பேரேடு மற்றும் களஞ்சியங்களினால் பேணப்பட்டு சென்ற விநியோகித்தல் கட்டளையின் | மதிப்பீட்டு பொருட்களை விநியோகித்தல் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | தார் இருப்பு ஒரே தடவையில் வேலைப்பிரிவிற்கு விநியோகிக்கும் முறைமை பின்பற்ற இருப்பதுடன், அதனை சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 33,120 பெறுமதியான CSS01 தார் பரல்கள் 02 (லீற்றர் 400) மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பேரேடு, கணக்குகள் மற்றும் இருப்பு பதிவேடுகளின் உள்ளபடியான பாவனைக்கும் உள்ளபடியான மீதியையும் வெளிப்படுத்தவில்லை.

**3.6 இனங்காணப்பட்ட நட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கொன்றித் பிரேமதிரத்ன மாவத்தையில் ஆதன இலக்கம் 17 இன் உரிமையாளரினால் ஆதனவரி மதிப்பீட்டு கட்டணத்தை அதிகரித்தற்கு எதிர்ப்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் சபை உத்தியோகத்தர்கள் வழக்கிற்கு சமூகமளிக்காமையின் காரணமாக நீதிமன்றத்தினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக புதிய மதிப்பீடொன்று விநியோகிப்பதற்கும் அதன் பிரகாரம் வரிக் கட்டணத்தை உயர்த்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.<br>மேற்கூறப்பட்ட ஆதனங்களுக்குரிய ரூபா 2,991,750 தொகையான நிலுவை ஆதன வரி வருமான மீதியில் வருமானத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் சட்ட கட்டணம் உள்ளடக்கிய ரூபா 3,015,750 தொகை சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | சட்டரீதியான நடவடிக்கைகளின் போது வருமான சாட்சிகள் சமர்ப்பித்து வழக்கு நடவடிக்கைகளினை சரியாக நடாத்திச் செல்வது சபையின் பொறுப்பாகும். | ஆதனவரி மதிப்பீட்டிற்கு எதிராக உரிய நிறுவனத்தினால் சபைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் ரூபா 2,991,751 தொகையை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.7 பெறுகை**

**3.7.1 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | டவீந்திர மென்டிஸ் விளையாட்டரங்களில் அமைந்துள்ள விளையாட்டு ைாதானத்தை அமைத்தல், கைவேலியை நிர்மாணித்தல் பெறுமதி சேரி வரியின்றிய ரூபா 562,524 தொகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 460,190 தொகையில் கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கும் கேள்வியில் இணங்கப்பட்ட விலைக்கும் இடையே முரண் ரூபா 100,334 அதாவது 17.8 சதவீதம் ஆக இருந்தமையால் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.11 இன் பிரகாரம் முரண்களுக்கான காரணம் சமர்ப்பிக்கப்படவில்லை. 2018 மார்ச் 29 ஆந் திகதி இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், எந்தவொரு நியாமான காரணமின்றி திகதி நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2018 யூன் 02 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.11 இன் பிரகாரம் முரண்களுக்கான காரணம் காண்பிக்கப்பட வேண்டி இருந்ததுடன் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாக சபையினால் சரியான கவனம் செலுத்தப்பட வேண்டும். | விளையாட்டு மைதானத்தை பயன்படுத்துகின்ற விளையாட்டு வீரர்களின் ஒரு தரப்பினர் எதிர்ப்பின் அடிப்படையில் செயற்திட்டத்தை நிறுவத்துவதற்கு வேண்டி ஏற்பட்டிருந்தது. விளையாட்டு வீரர்களின் இணக்கப்பாட்டினை பெற்று இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ஜயவர்த்தனபுர பல்நோக்குகட்டிடம் ரூபா 3,517,924 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட போதிலும், 2018 திசெம்பர் 31 வரையிலும் எந்வொரு பயன்பாட்டிற்கும் எடுக்ககூடிய வகையில் பூர்த்தி செய்யப்படவில்லை. 2018 சனவரி 19 ஆந் திகதிய CSO/PLN/MA09/01/47 ஆம் இலக்க மேல்மாகாண பிரதம செயலாளரின் வழிகாட்டிக் கோவையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திட்ட அறிக்கை | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் செயற்திட்ட அறிக்கை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலம் மற்றும் நிதியாய்விற்காக இனங்காணப்பட்ட திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை | போதியளவான பணம் காணப்படாமையினால் அவ்வவ்போது கிடைக்கின்ற பணத்தை பயன்படுத்தி கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் செய்யப்பட்டிருந்ததுடன் அபிவிருத்தி செயற்திட்ட மதிப்பீட்டின் எல்லையான ரூபா |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பத்தின் போது அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | 2.5 மில்லியன் தொகையினை விஞ்சி நிதியேற்பாடு பெறமுடியாது இருந்தது. |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 32,714,033 பெறுமதியான சபை நிதியத்தின் 57 செயற்திட்டங்களின் வேலைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அவசர பெறுகை தேவையின் பிரகாரம் செய்வதற்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இதற்காக காலநேரம்போதுமான திட்டத்துடன் நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் அவசர தேவையாக கருதி பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.8.1(அ)(1) மற்றும் (II) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதியின் போது கூறுவிலைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் கேள்வியினை திறப்பதற்கும் ஒப்பந்தத்தை கையளித்து உன்படிக்கை செய்வதற்கும் மற்றும் செயலாற்றல் காப்புறுதியை சமர்ப்பிப்பதற்கும் ஒரே திகதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 2018 ஆம் ஆண்டிற்கான சபை நிதியத்தின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டு செயற்திட்டம் அற்த ஆண்டில் நியாயமான பெறுகை நடைமுறைகளின் கீழ் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தை அமுல்படுத்தாதிருந்தால் நிதிஏற்பாடு தொடர்ச்சியான வேலையாக இருக்க முடியாதிருந்தமையால் 2018 செப்தெம்பர் 27 ஆந் திகதி சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அரசியல் நெருக்கடிகளின் அடிப்படையில் அது நிராகரிக்கப்பட்டிருந்தமையால் 2018 திசெம்பர் 27 ஆந் திகதி விசேட சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி அவசர தேவையாகக் கருதி 57 செயற்திட்டங்களுக்கும் கேள்வி கோரப்பட்டு ஒப்பந்தம் கையளித்து உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வாடகை அடிப்படையில் 200 மணித்தியால காலத்திற்காக D5D இயந்திரமொன்றை பெற்றுக்கொள்வதற்கு கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன் ரூபா 5,500 தொகையில் இயந்திரம் பெறப்பட்டிருந்தது. எனினும் மாவட்ட விலைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் D5D வகையின் இயந்திரத்திற்காக மீற்றர் மணித்தியாலத்திற்கு ரூபா 4,750 தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் மீட்டர் மணித்தியாலத்திற்கு ரூபா 750 வீதம் ரூபா 150,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மாவட்ட விலைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட கூறுவிலை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். | மாவட்ட விலைக்குழுவின் விலை 2017 ஆம் ஆண்டின் இறதியின் போது தீர்மானிக்கப்பட்டமையால் எரிபொருளின் விலை உயர்வடைந்து சென்றமையும் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படட கூறுவிலை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |